தமிழ்நாடு சட்டப் பேரவை

திருவள்ளுவர் ஆண்டு 2041–சித்திரை 8

2010 ஏப்ரல் 21, புதன்கிழமை

சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்டம், புதிய சட்டப் பேரவை-தலைமைச் செயலக வளாகத்தில் உள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** அவர்கள் தலைமையில் காலை *9-30* மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"ஆற்றின் அளவறிந் தீக அதுபொருள்
போற்றி வழங்கு நெறி."

வருவாய் அளவை அறிந்து, அதனை வகுத்து வழங்குவதே பொருளைச் சீராகக் காத்து வாழும் வழியாகும்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள், வினா வரிசை எண் *71*, மாண்புமிகு உறுப்பினர் **திரு. வை. காவேரி**, மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

71—

நீதிமன்ற வளாகம்

***25085—திரு. வை. காவேரி:**

மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடியில் நீதிமன்ற வளாகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2010 ஏப்ரல் 21

மாண்புமிகு திரு. துரைமுருகன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) 2010-2011 ஆம் ஆண்டில், எந்தெந்த ஊர்களில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகங்கள் அமைப்பது என்பது குறித்து ஏற்கெனவே என்னுடைய மானியக் கோரிக்கையில் தெரிவித்திருக்கிறேன். எடப்பாடியில் நீதிமன்ற வளாகம் அமைப்பதற்கான செயற்குறிப்பு, இன்னும் உயர் நீதிமன்றத்திலிருந்து அரசுக்கு வரவில்லை. இருந்தாலும், அடுத்த நிதியாண்டில் எடுத்துக்கொள்ளப்படும் என்ற உறுதியை அவருக்கு நான் தெரிவிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. காவேரி.

திரு. வை. காவேரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எடப்பாடி, தாலுகா தலைமையிடமாகும். எடப்பாடி தாலுகா, எடப்பாடி நகராட்சி, எடப்பாடி மற்றும் கொங்கணாபுரம் ஆகிய இரண்டு ஒன்றியங்களையும், பூலாம்பட்டி பேரூர், கொங்கணாபுரம் பேரூர் ஆகிய இரண்டு பேரூராட்சிகளையும், 25 வருவாய்க் கிராமங்களையும் உள்ளடக்கியுள்ளது. எடப்பாடி மற்றும் பூலாம்பட்டி ஆகிய இரண்டு காவல் நிலையங்கள் உள்ளன. எடப்பாடியில், தாலுகா அளவில் சுமார் 2,10,000 மக்கள் வசிக்கிறார்கள். எடப்பாடி தாலுகா சம்பந்தப்பட்ட வழக்குகள், சங்ககிரியிலுள்ள நீதிமன்றங்களில் நடைபெறுகின்றன. எடப்பாடியில் பக்கநாடு பகுதியிலிருந்து, சுமார் 40 கிலோ மீட்டர் தூரத்தில் சங்ககிரி உள்ளது. சங்ககிரி நீதிமன்றங்களிலுள்ள வழக்குகளில், சுமார் 65 சதவீதம் வழக்குகள் எடப்பாடி தாலுகா சம்பந்தப்பட்ட வழக்குகள் ஆகும். சங்ககிரி நீதிமன்றங்களில் 2001 ஆம் ஆண்டில் தொடரப்பட்ட சிவில் வழக்குகளும், 1998 ஆம் ஆண்டில் தொடரப்பட்ட கிரிமினல் வழக்குகளும் இன்னும் நிலுவையில் உள்ளன. எடப்பாடியில் நீதிமன்றம் அமைப்பதற்கான, அரசு விதிகளுக்குட்பட்ட அனைத்து நிலைமைகளும் உள்ளன. எனவே, எடப்பாடியில் புதிய நீதிமன்றம் தொடங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

2010 ஏப்ரல் 21]

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. காவேரி, எடப்பாடி நீதிமன்றத்தினுடைய ஸ்தல புராணத்தைச் சொன்னதையெல்லாம் நான் மறுக்கவில்லை. அங்கு ஓர் ஒருங்கிணைந்த நீதிமன்றம் தேவை என்பதை உணர்ந்துதான் அடுத்த நிதியாண்டில் எடுத்துக்கொள்ளப்படும் என்ற உறுதியை நான் தந்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. காவேரி.

திரு. வை. காவேரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவிப்பதுடன், இந்த ஆண்டே எடுத்துக்கொள்ள வேண்டுமாய்க் கேட்டு, அமர்கிறேன். (குறுக்கீடு)

திரு. ஆர்.எம். பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆர்.எம். பழனிசாமி, நீங்கள் என்ன எடப்பாடி நீதிமன்றத்திற்குக் கேட்கப் போகிறீர்களா? உட்காருங்கள். (குறுக்கீடு) இந்த subject-க்கும், உங்களுக்கும் சம்பந்தமில்லையல்லவா? உட்காருங்கள்.

வினா வரிசை எண் 72, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. சின்னச்சாமி, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

72—

பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி

***104487—திரு. செ. சின்னச்சாமி:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை வட்டத்தில் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,